செய்தி வெளியீடு எண்: 712 நாள்:23.10.2019

**இன்று (23.10.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் மற்றும் அருள்மிகு அத்திவரதர் சிறப்புப் பணி பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை**

**தமிழ்நாடு அமைதிப் பூஞ்சோலையாக திகழ்வதற்கு, சட்டம்–ஒழுங்கை நன்கு பராமரித்து வரும் காவல்துறையில் எண்ணற்ற நலத் திட்டங்களை செயல்படுத்தி, அத்துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய தமிழ்நாட்டின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.**

இவ்விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

**நிகழ்ச்சியிலே பங்கு பெற்று மேடையிலே வீற்றிருக்கின்ற**

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!**

**மரியாதைக்குரிய நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களே!**

**நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற**

**மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!**

**மரியாதைக்குரிய உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!**

**மரியாதைக்குரிய காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!**

**மேடையில் வீற்றிருக்கும் காவல்துறை இயக்குநர்களே!**

**சென்னை மாநகர காவல் ஆணையாளர் அவர்களே!**

**காவல்துறை அதிகாரிகளே, காவலர்களே அவர்தம் குடும்பத்தினரே!**

**வருகை தந்திருக்கின்ற மாணவச் செல்வங்களே!**

**பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!**

**இவ்விழாவில் பங்கேற்றுள்ள பெரியோர்களே !தாய்மார்களே!**

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களைக் காக்கும் மகத்தான பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள காவல் துறையில், காவல் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்புப் படை மற்றும் தடய அறிவியல் துறை ஆகிய துறைகளில் தகைசால் பணி, மெச்சத்தக்க பணி, பொது சேவையில் சீர்மிகு பணி, சிறந்த நற்பணி, சீர்மிகு புலனாய்வு, விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தடய அறிவியல் சீர்மிகு பணி ஆகியவற்றிற்கான மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் மற்றும் அருள்மிகு அத்திவரதர் சிறப்புப் பணி பதக்கங்களை **604** நபர்களுக்கு இச்சிறப்புமிகு விழாவில் வழங்கியதில் நான் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘‘**நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் போதெல்லாம், காவலர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பதுடன், அவர்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் மட்டும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். காவல் துறை பணிகளில் குறுக்கீடு செய்ய யாருக்குமே அதிகாரமில்லை என்பது தான் எனது திடமான கருத்து ஆகும். காவல் துறைக்கு பொறுப்பு வகிக்கின்ற முதலமைச்சர் கூட அதன் செயல்பாடுகளில் தலையிட முடியாது**’’ என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காவல் துறையினரைப் பற்றிக் குறிப்பிடுகையில், **“நான் எங்கே வைத்து காவல்துறையினரைப் பற்றி பேசுகிறேன் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு தாய்த்தன்மைக்கு ஈடாக, என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு ஈடாக வைத்து எண்ணுகிறேன்**’’ என்று காவல் துறையைப் பற்றி மிகவும் உயர்வாகக் கூறியுள்ளார்.

காவல்துறையின் செயல் திறம் சிறக்க, பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளையும், காவலர்களின் நலன் காக்க பல்வேறு நலத் திட்டங்களையும் நமது இரு பெரும் தலைவர்களும் செயல்படுத்தியுள்ளனர். இவர்களின் நல்லாசியுடன் செயலாற்றும் மாண்புமிகு அம்மாவின் அரசும் இந்தப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு காவல் துறையினர், தங்களது சிறப்பான செயல்பாடுகளினால், வரவுள்ள பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிந்து, தேவையான தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொதுமக்கள்

பாதிக்கப்படாதவாறு மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி, பொது அமைதியை பேணிக் காத்து வருகின்றனர். மேலும், மாநிலம் முழுவதும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி, குற்ற நிகழ்வுகளைத் தடுத்து வருவதுடன், குற்ற வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து தண்டனை பெற்றுத் தந்தும் வருகின்றனர். இதனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான குற்ற நிகழ்வுகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

‘‘**அமைதி, வளம், வளர்ச்சி**’’ என்ற கோட்பாட்டின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது. ஒரு மாநிலம் வளர்ச்சி பெற வேண்டுமானால், அந்த மாநிலத்தின் மக்கள் வளம் பெற வேண்டும். மக்கள் வளம் பெற வேண்டுமெனில் அந்த மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கென இது போன்ற பல்வேறு காரணிகள் இருந்தாலும், இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது பொது அமைதி, பாதுகாப்பு ஆகியவைதான். பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் இருந்தாலும், அமைதியான சூழ்நிலை நிலவவில்லை என்றால் அங்கே எந்தவிதமான வளர்ச்சியும் ஏற்படாது. எனவே தான் பொது அமைதிக்கும், பாதுகாப்பிற்கும், சட்ட ஒழுங்கிற்கும் மிகுந்த முக்கியத்துவத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் பயனாக தமிழ்நாட்டை நாடி பல்வேறு தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாண்டு தொடக்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் சந்திப்பும் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது என்பதை பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை நாட்டிலேயே சிறந்த படை என்ற பெயர் பெற்று விளங்குகிறது. இதற்கு சான்றாக, **இந்தியா டுடே** பத்திரிகை, சட்ட ஒழுங்கில் சிறப்பாக செயல்படும் மாநிலம் தமிழ்நாடு என்பதற்காகவும், ஒட்டுமொத்த செயல் திறன் மற்றும் சுற்றுலாத் துறைக்கும், தமிழ்நாட்டிற்கு விருதுகள் வழங்கியுள்ளது. இது காவல்துறையினரான உங்களின் அயராத உழைப்பினால் மட்டுமே சாத்தியமாயிற்று.

மாமல்லபுரத்தில் இம்மாதம் 11 மற்றும் 12 தேதிகளில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களுக்கும், சீன அதிபர் ஷி ஜின்பிங் அவர்களும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. இரு பெரும் உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வுக்கு சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்த நமது

காவல்துறையினரை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன நாட்டு அதிகாரிகளும் வெகுவாகப் பாராட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை வந்த சீன அதிபர் இரு நாட்களும் சென்னையிலிருந்து மாமல்லபுரம் சென்று திரும்பினார். ஒரு மிகப் பெரிய தலைவர் இவ்வளவு நீண்ட தூரத்தை சாலை வழியாகச் செல்வதற்கு பாதுகாப்பு வழங்குவது ஒரு சவாலான விஷயமாகும். அதை நமது காவல்துறை தங்களுக்கே இயல்பாக உள்ள அனுபவத்தாலும், செயல்திறனாலும் சிறப்பாகச் செய்து வெற்றி கண்டுள்ளனர்.

நமது காவல் துறையினர் வகுத்து வைத்திருந்த பாதுகாப்பு வியூகங்களையும், திறமைகளையும் கண்டு சீன அதிகாரிகள் வியந்து போனார்கள். "**நாங்கள் எதிர்பார்த்ததைவிட சிறப்பாக செய்துள்ளீர்கள்**" என்று அவர்கள் நமது காவல்துறையினரைப் பாராட்டினார்கள். இது காவல்துறையின் சிறப்பான பணிக்குக் கிடைத்த ஒரு மிகப் பெரிய பாராட்டுச் சான்றிதழாகும்.

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமை கேமராவுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகரத்தில் மட்டும் 1 லட்சத்து 31 ஆயிரத்து 789 உள்சுற்று கண்காணிப்பு கேமராக்களும் மற்றும் தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களில் 1 லட்சத்து 79 ஆயிரத்து 949 உள்சுற்று கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது அதிகரித்துள்ளது. இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ்நாட்டில் காவல் கண்காணிப்பை மேலும் மேம்படுத்த வேண்டும் என்று நான் காவல் துறை உயர் அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல் துறையினர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினால், தீவிரவாத இயக்கங்கள் மற்றும் இடதுசாரி தீவிரவாத அமைப்புகளின் சட்டவிரோதச் செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் **2017–** ஆம் ஆண்டிற்கான காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள புள்ளி விவரங்களை பத்திரிகை வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார். அதில் தவறு உள்ளதாக தெரிவித்துள்ளது முற்றிலும் தவறு. ஏற்கனவே கொள்கை விளக்கக் குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தில், பெருகி வரும் பொருளாதார வளர்ச்சி காரணமாக, அதிகரித்து வரும் வாகனங்களால் சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சாலை விபத்துக்களைத் தடுக்கவும், போக்குவரத்து சம்மந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளையும் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து, தக்க தடுப்பு நடவடிக்கைகள், தமிழ்நாடு காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம், தமிழ்நாட்டில் சாலை விபத்துக்களில் உயிரிழக்கும் நபர்களின் எண்ணிக்கை **2016–**ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு **36.40** சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல் துறையின் இச்செயல்பாடுகளை, இந்திய மாநிலங்களவையில், மாண்புமிகு மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

அண்மையில் காஞ்சிபுரத்தில் **40** ஆண்டுகளுக்குப் பின்னர் பக்தர்களுக்குக் காட்சியளித்த **அருள்மிகு அத்திவரதர் வைபவத்தின் போது,** சுமார் ஒரு கோடி பக்தர்கள் காஞ்சி நகருக்கு வருகை புரிந்து அருள்மிகு அத்திவரதரை தரிசித்துச் சென்றனர். இவ்வைபவம் சிறப்பாக நடைபெற தொடர்ந்து **48** நாட்கள் இரவு–பகல், வெயில்–மழை என்று பாராமல், பக்தர்களை கனிவாகவும், பரிவோடும் அணுகி, பக்தர்கள் சிரமமின்றி அருள்மிகு அத்திவரதரை தரிசித்துச் செல்ல, காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றிய காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர்கள் அனைவரையும் நான் மனதார பாராட்டுகின்றேன். இப்பணிக்காக ஏற்கெனவே, **28,000** பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியுள்ளேன். மேலும், அவர்களின் சிறந்த பணியைப் பாராட்டி அனைத்து சீருடைப் பணியாளர்களுக்கும் **அருள்மிகு அத்திவரதர் பதக்கங்களை** தற்போது வழங்கியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் அமைச் சுப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வரசு அவர்களுக்குண்டான பதவி உயர்வுகளை குறித்த நேரத்தில் வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் காவல் துறை

கண்காணிப்பாளர்கள் முதல் காவல் துறை இயக்குநர் வரை உள்ள பதவிகளுக்கு 218 உயர் அதிகாரிகளுக்கும், முதல் நிலை காவலர் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை உள்ள 5,979 காவல் ஆளிநர்களுக்கும், 305 அமைச்சுப் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாண்டிற்கான காவலர்களின் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு 5,530 காவலர்கள் தங்களது அடிப்படை பயிற்சி முடித்து காவல் துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேபோன்று, 227 தொழில்நுட்ப சார்பு ஆய்வாளர்களும், 179 விரல் ரேகை பிரிவு சார்பு ஆய்வாளர்களும் பயிற்சி முடித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 8,427 இரண்டாம் நிலை காவலர்களின் காலிப் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது, விரைவில் இப்பணிகள் முடிந்து, இக்காவலர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர். இதன்மூலம், காவல்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு, காவல் துறையினர் மேலும் சிறப்பாகப் பணியாற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட **காவல் நிறை வாழ்வு பயிற்சித்** திட்டத்தின் கீழ் இது வரை **68,000** காவல் ஆளிநர்களும், அவர்களைச் சார்ந்த சுமார் **75,000** குடும்ப உறுப்பினர்களும் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது மிகுந்த மனமகிழ்ச்சி அளிக்கின்றது.

நான் சட்டமன்றத்தில் அறிவித்தபடி, காவல் துறையின் பணிகளை மேலும் சிறப்பாக்கும் வகையிலும், நமது காவல்துறை இந்திய அளவில் முதன்மை இடத்தைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்த்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கவும் "**நான்காவது போலீஸ் கமிஷன்**" அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினருக்கான அனைத்து விதமான போட்டிகளில் தமிழ்நாடு காவல் துறையினர் திறமையாக செயல்பட்டு நாட்டிலேயே பிற மாநில காவல் துறையினருக்கு முன்னுதாரணமாக விளங்கி வருகின்றனர்.

- உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற காவல் திறனாய்வுப் போட்டிகளில், புலன் விசாரணையில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும், 13 பதக்கங்களும், 3 சுழற் கோப்பைகளும் வென்றுள்ளனர்.

- உடல் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காகவும், பணித் திறனை வளர்த்துக் கொள்வதற்காகவும் உலக அளவில் சீன நாட்டில் நடைபெற்ற போட்டிகளில் 32 பதக்கங்களும் பெற்றுள்ளனர்.
- கேரளத்தில் நடைபெற்ற தென் மண்டல சுழல் துப்பாக்கி சுடும் போட்டிகளில் 4 பதக்கங்களையும் வென்று சாதனை படைத்துள்ளனர் என்பதை அறிவதில் உளமார மகிழ்ச்சி கொள்கிறேன், பாராட்டுகின்றேன் அவர்களை.

காவல்துறையினர், முக்கிய குற்றப் புலனாய்வுப் பணிகளில் ஈடுபடும்போது, சரியான முறையில் திட்டமிட்டு, காலம், நேரம், இடம் ஆகியவற்றை கணித்து, திறம்பட செயலாற்ற வேண்டும் .

ஒரு வேலையை நல்ல முறையில் செய்து முடித்தோம் என்ற பெருமை உணர்வு நமக்குள் இருந்து வரவேண்டும். வேலையின் தரமும், வேலையை செய்தவரின் தரமும் பிரிக்க முடியாதவை.

ஒருவிதப் பெருமை உணர்வுடன் ஒருவர் வேலை செய்யும் போதுதான் அந்த வேலை மிகச் சிறப்பாக இருக்கிறது. எந்தப் பணியையும் ஒவ்வொரு முறையும் சரியாகவே செய்யுங்கள். '**நாளைய சமுதாயத்திற்கான சிறந்த காப்புறுதி; இன்று நீங்கள் செய்யும் சிறப்பான பணிதான்**'. இங்கு எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

சிற்பக் கலைஞர் ஒருவர் பல நாட்களாக ஒரு சிலையை செதுக்கிக் கொண்டிருந்தார். சிறு சிறு விஷயங்களில் கூட கவனம் செலுத்தி திரும்பத் திரும்ப ஒவ்வொன்றையும் திருத்திக் கொண்டிருந்தார். சிலையின் முழு உருவத்தையும் மிகவும் நேர்த்தியாக, அழகு மிளிர வடித்துக் கொண்டிருந்தார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவரது செயல் தேவையற்ற வேலையாகத் தோன்றியது. அவரிடம், ஏன் இப்படி செய்கிறீர்கள் ? என்று கேட்டனர். அதற்கு அந்தச் சிற்பி, எந்த வேலையைச் செய்தாலும் மற்றவர்களுக்காக மட்டுமல்லாமல் நமக்கு முழு திருப்தி அளிக்கும் விதமாகத் தான் செய்ய வேண்டுமென்றார். அந்தச் சிலையின் நளினத்தையும், நேர்த்தியையும் கண்டு அதனைக் கோவிலில் நிறுவினார் அந்நாட்டு மன்னர். **"சின்னஞ்சிறு விஷயங்களில் கூட கவனம் செலுத்தினால் தான் நம் பணி நிறைவாக, சிறப்பாக அமையும்"** என்று கேலி பேசிய மக்கள் உணர்ந்தனர். இந்தக் கதையில் வரும் சிற்பக் கலைஞரைப் போல் நாம் எந்தப் பணியை மேற்கொண்டாலும் நமக்கு முழு திருப்தி அளிக்கும் விதமாகவும், நேர்த்தியாகவும் செயல்பட வேண்டுமென

இத்தருணத்தில் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அப்படி நாம் செயல்பட்டால் நமது பணிக்கான அங்கீகாரமும், விருதுகளும் தானாக உங்களுக்கு வந்து சேரும்.

சீருடைப் பணியாளர்களின் தியாகத்தையும், கடமை உணர்வையும் பாராட்டி, கௌரவிக்கும் வகையில் இப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற நிகழ்வுகள், பதக்கங்களைப் பெறுவோருக்கு மேலும் சிறப்பாக பணிபுரிய ஊக்கமளிப்பதுடன், பிற பணியாளர்களுக்கும் நற்பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தையும் அளிக்கிறது. இந்த நிகழச்சியில் பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு, இனிய தீபாவளி வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் இத்தருணத்தில் அனைவருக்கும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**